## பெருநகர சென்னை மாநகராட்சி

## செய்தி வெளியீடு

**செ.வெ.எண்.93** **நாள் : 05.05.2025**

**மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் திரு. பி. கே. சேகர்பாபு அவர்கள், எம்.கே.பி. நகர், மத்திய நிழற்சாலையில் கட்டப்பட்டுள்ள சறுக்கு விளையாட்டு மைதானத்தினை இன்று பயன்பாட்டிற்குத் திறந்து வைத்தார்.**

மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் திரு. பி. கே. சேகர்பாபு அவர்கள், தண்டையார்பேட்டை மண்டலம், வார்டு-37, எம்.கே.பி. நகர், மத்திய நிழற்சாலையில் 37வது வார்டு மாமன்ற உறுப்பினர் வார்டு மேம்பாட்டு நிதியில் ரூ.30 இலட்சம் மதிப்பில் கட்டப்பட்டுள்ள சறுக்கு விளையாட்டு மைதானத்தினை இன்று (05.05.2025) பயன்பாட்டிற்குத் திறந்து வைத்தார்.

இந்நிகழ்ச்சியில், மாண்புமிகு மேயர் திருமதி ஆர். பிரியா, பெரம்பூர் சட்டமன்ற உறுப்பினர் திரு. ஆர். டி.சேகர், வடக்கு வட்டார துணை ஆணையாளர் கட்டா ரவி தேஜா இ.ஆ.ப., மண்டலக்குழுத் தலைவர் திரு. நேதாஜி யு. கணேசன், மாமன்ற உறுப்பினர் திரு. ஜெ. டில்லிபாபு மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**